सत्यमेव जयते

# இந்திய துணைத்தூதரகம்

**யாழ்ப்பாணம்**

## ஊடக அறிக்கை

## ஆயுஷ் புலமைப்பரிசில் திட்டம்

இந்தியத் தூதரகம் 2014-2015 கல்வியாண்டிற்கான இளமாணி, முதுமாணி, கலாநிதிப் பட்டங்களுக்கு ஆயுர்வேதம், யுனானி, சித்த, ஹோமியோபதி யோகா கற்கை நெறிகளுக்காக ஆயுஷ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 08 புலமைப்பரிசுகளை இலங்கையர்களுக்காக வழங்கப்படுவது பற்றி அறியத்தருகிறது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்கு திறமைவாய்ந்த இலங்கையர்களை இந்திய அரசு தெரிவுசெய்கிறது. இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் புலமைப்பரிசுக்குரியவர் இந்தியாவிலுள்ள சில மிகப்பிரபலமான பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக இந்திய அரசால் தெரிவு செய்யப்படுவார்.

எல்லாப் புலமைப்பரிசுகளும் முழுமையான கல்விக்கட்டணம், கல்விக் காலம் முழுமைக்குமான மாதாந்த வாழ்க்கைப் படி என்பவற்றை வழங்கும். அத்துடன் தங்குமிடத்துக்கான கொடுப்பனவும் காகிதாதி மற்றும் புத்தகங்களுக்கான வருடாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படும். கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேரவையின் புலமைப்பரிசு பெறும் அனைவருக்கும் இந்தியாவில் முழுமையான வைத்தியப் பராமரிப்பு வசதிகளும் வழங்கப்படும்.

இப்புலமைப்பரிசுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரத்தை இலங்கை உயர்கல்வி அமைச்சு பரிந்துரைத்த படிவத்தில் நிரப்பி ஆவணங்ளை இணைத்து உயர்கல்வி அமைச்சுக்கு 8 ஜுலை 2014 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்ப முடியும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முகவரி: உயர் கல்வி அமைச்சு 18, வார்ட் இடம், கொழும்பு 07.

விண்ணப்பப் படிவங்களை உயர்கல்வி அமைச்சின் இணையத்தள முகவரியான www.mohe.gov.lk இல் பெற்றுக்கொள்ளலாம். புலமைப்பரிசின் ஏனைய விபரங்கள் மற்றும் அது பற்றிய கையேட்டைப் பெற்றுக் கொள்ள www.indianmedicine.nic.in எனும் இணையத்தளத்தையும் அணுக முடியும்